# கோவை மெட்ரோ ரயில் திட்டம்: அறிக்கை தயார்

## துணை முதல்வர்

**சென்னை, பிப்.23:** கோவை மெட்ரோ ரயில் முதல்கட்ட திட்டத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதாக துணை முதல்வரும், நிதியமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

இது தொடர்பாக இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கலின்போது அவர் கூறியது: சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான நிதியில், மத்திய அரசு தனது பங்கை வழங்கும் என மத்திய நிதியமைச்சர் தனது வரவு செலவுத் திட்ட உரையில் தெரிவித்துள்ளதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன். இத்துடன் இத்திட்டத்துக்கான மொத்த நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டுள்ளது. அதே நேரம் ரூ.6,683 கோடி மதிப்பீட்டில், 44 கிலோமீட்டர் நீளமுள்ள கோயம்புத்தூர் மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல்கட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என துணை முதல்வர் தெரிவித்தார்.